அதை வாங்குகிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதோடு, இப்படி விவசாயிகளிடமிருந்து தனியாக நெல், விதை என்று எத்தனை டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எவ்வளவு என்ற குறிப்பு இல்லை. ஆனால் சான்று அளிக்கப்பட்ட விதைகளைத்தான் வாங்கவேண்டும், கொள்முதல் செய்ய வேண்டுமென்று தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறோம். அதை மீறி தவறு நடந்த சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதைகள் தயாராகின்ற நிலையில் பதர்களும் சேர்ந்து இருப்பதன் காரணமாக, சரியான முறையில் காய வைக்காத நிலையில் அதை விதைக்கும்போது முளை வருவதில்லை என்று பொது மக்கள் கூறுகிறார்கள். நல்ல முறையில் பதர்களை நீக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சான்று அளிக்கப்பட்ட விதைகளை வாங்கி விதைகள் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பதர்களை நீக்குவது அரசினுடைய குறிக்கோள்.

திரு. த. பழனி : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கோலியனூர் ஒன்றியத்திலும், கரணை ஒன்றியத்திலும் போதுமான அளவிற்கு விதைகள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதுவும் குறிப்பாக மணிலா போன்று மானிய விலையில் கொடுக்கப்படுவது சரியான முறையில் கிடைப்பது இல்லை. எனவே போதுமான அளவில் அது கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அதற்கு மேலும் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகள்

*688—(*வினா எண். 4088)* திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி சிங்கப்பட்டி பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) அம்பாசமுத்திர தொகுதி சிங்கப்பட்டி பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

689—(*வினா எண். 5491) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சட்ட துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் புதிதாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னையில் புதியதாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அப்படியானால், இந்த இடம் எதற்காகப் பயன்படுத்தப்படும் ? மாற்றுச் சிறைச்சாலையைத் திறந்த வெளிச் சிறைச்சாலையாக அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மைய சிறைச்சாலையை புழல் பகுதிக்கு மாற்றக் கூடிய ஒரு திட்டம் அரசிடம் உள்ளது. அந்தப் புழல் பகுதியிலேயே சிறைச்சாலைக்கான பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் சென்னை மத்திய சிறைச்சாலை அந்தப் பகுதிக்கு மாற்றப்படும்.

எம். எம். சி.யைப் பொறுத்தவரையில், போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்ட்டிட்யூஷனாக அதனுடைய நிலையை உயர்த்தவேண்டுமென்று அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தினாலே, அதற்குத்தான் தரப்படும்.

(முற்பகல் 9–20)

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் அமைக்கப்படவுள்ளன ? சிறைச்சாலை என்றாலே, பாம்புகளும், பல்லிகளும் ஊறுகின்ற சிறைச்சாலையில்